DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.29/2019**

Deposition of witness for Prosecution ம.சா.2

Name : சாமிநாதன்
Father/ Husband Name : மீனாட்சிசுந்தரம்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 06.11.2025.

**முதல்விசாரணை தொடர்ச்சி:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. புகார்தாரர் முத்தையாவுக்கு சம்பவத்தில் காயம்பட்டதற்கு முதலுதவி செய்ய அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு வைத்து முத்தையாவை காயங்களுடன் நான்தான் என்னுடைய சாம்சங் போனில் போட்டோ எடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் நான் எடுத்தது் தான். **(மேற்படி புகைப்படம் குறுந்தகடு மற்றும் பிரிவு 65B சான்றிதழுடன் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் ம.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. புகார்தாரர் எனக்கு உறவினர். புகார்தாரர் எனக்கு ஒன்றுவிட்ட மாமா பையன். நான் முதல் விசாரணையில் வெள்ளையன் மகன் ராமநாதன், வீரப்பன் மகன் ராஜீ என்ற வினய்தீர்த்தான் ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்ததாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் புகார்தாரர் புகாரின் சாட்சி பட்டியலில் சாமிநாதன், மாணிக்கம் ஆகியோர்களைதான் சாட்சியாக சேர்த்துள்ளார் என்றால் அவர்கள் இருந்தார்களா என்று எனக்கு தெரியாது, நான் சொல்லும் நபர்கள் இருந்தார்கள். புகாரை நான் படித்துப் பார்க்க பார்க்கவில்லை.

2. ம.சா.ஆ.8 புகைப்படத்தை நான்தான் எடுத்தேன் என்று புகார்தாரர் புகாரில் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. புகாரில் புகைப்படத்தை நண்பர் ஒருவர் எடுத்ததாக தான் சொல்லியுள்ளார் என்றும் குறிப்பிட்டு பெயர் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ம.சா.ஆ.8 -டன் தாக்கல் செய்த சான்றிதழில் செல்போன் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அவ்வாறு செல்போன் எண் குறிப்பிடுவதற்கு காலம் இல்லை. மேற்படி செல்போன் என்னுடையது தான் என்பதற்கு ரசீது வைத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி செல்போன் தற்போது என்னிடம் உள்ளதா என்றால் தற்போது இல்லை, பல வருடங்கள் ஆனதால் வேறு போன் மாற்றிவிட்டேன்.

3. நான் ம.சா.ஆ.8 -டன் தாக்கல் செய்த சான்றிதழில் புகைப்படம் குறித்து மேலும் விவரங்களை குறிப்பிட காலம் உள்ளது என்றும் அவற்றை நான் பூர்த்தி செய்யவில்லை என்றும் சொன்னால் சரிதான். புகைப்படம் புகார்தாரரால் போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றும் அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சான்றிதழும் முழுமை பெறாத சான்றிதழ் என்றும் அதனால் சட்டப்படி ஏற்கக்கூடியது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி எந்த சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.